## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1) கீழ்க்காணும் எந்த நகரத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான ET Global business summit நடந்தது?**

A] புதுடில்லி

B] ஹைதராபாத்

C] ஜெய்ப்பூர்

D] நாக்பூர்

- ✓ வருங்கால கொள்கைக்கான பாதைகளை வகுக்கும் நோக்கில் புது டில்லியில் கடந்த பெப்ரவரி மாதம் 23ஆம் தேதி ஐந்தாவது எகனாமிக் டைம்ஸ் உலகளாவிய வணிக உச்சி மாநாடு, பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. டெஸ்லாவின் துணை நிறுவனரான **Martin Eberhard**, **AIRBNB**ன் துணை நிறுவனரான **Nathen Blecharczyk** , **Kittyhawk** நிறுவனரான செபாஸ்டின் தருண் மற்றும் உலகளாவிய வணிகர்களும் தொழில்நுட்ப தொழில் முனைவோர்களும் இதில் பங்கு கொண்டனர்.
- ✓ **Times** குழுமத்தின் குறிப்பிடத்தக்க முயற்சிகளில் இந்த உச்சி மாநாடும் ஒன்றாகும்.
- ✓ இதன்மூலம் இந்தியாவின் பொருளாதாரத்தை கட்டமைக்க இந்தியா மற்றும் உலகளாவிய தலைவர்கள், வணிகர்கள், கொள்கை வகுப்பாளர்கள், ஆசிரியர்கள், பெருநிறுவனர்களை கொண்டு இந்த மாநாடு நடைபெற்றது.

**2) சமீபத்தில் The financial action task force (FATF) தீவிரவாதிகளுக்கு நிதி அளிப்பதை கட்டுப்படுத்தாதலால் கீழ்காணும் எந்த நாட்டை Grey list எனப்படும் பட்டியலில் சேர்த்தது?**

A] ஈராக்

B] வட கொரியா

C] ஈரான்

D] பாகிஸ்தான்

- ✓ **The financial action task force (FATF)** என்பது சர்வதேச தீவிரவாத நிதி பரிமாற்றத்தினை கண்காணிக்கும் மையமாகும். சமீபத்திய அறிக்கையில் பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு

நிதியளிப்பதை கட்டுப்படுத்த தவறியதால் பாகிஸ்தானை "கிரே லிஸ்ட்" எனப்படும் ஒதுக்கப்பட்ட பட்டியலில் சேர்த்தது.

✓ புல்வாமா தாக்குதலுக்குப் பிறகு இந்தியா, பாகிஸ்தானை கருப்பு பட்டியலில் இணைக்குமாறு வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது.

✓ பாரிசில் நடைபெற்ற இந்த மையத்தின் ஒருவார கூட்டத்தின் இறுதியில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

✓ பாரிஸை தலைமையிடமாகக் கொண்ட இந்த நிறுவனம் பாகிஸ்தான் பணச் சலவையையும் தீவிரவாதிகளுக்கு நிதி அளிப்பதையும் கட்டுப்படுத்த தவறியதாக குற்றம்சாட்டுகிறது. லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது, ஜமாத்-உத்-தவா போன்ற தீவிரவாத குழுக்களினால் ஏற்படும் விளைவுகளை பொருட்படுத்தாமல் இருக்கிறது என குற்றம் சாட்டியது. அக்டோபர் **2019**-க்குள் இந்த நிறுவனத்தால் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகளுக்கு உட்பட்டு நடக்காவிட்டால் பாகிஸ்தான் கருப்புப் பட்டியலில் இணைக்கப்படும் என அறிவித்துள்ளது. மேலும் இத்தகைய தவறுகளை குறைப்பதற்கு பாகிஸ்தான் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை அறிக்கையாய் சமர்ப்பிக்கும்படி கேட்டுள்ளது.

✓ புல்வாமாவில் நடந்த தாக்குதலுக்கு ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத குழுவினர் பொறுப்பேற்று உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கூடுதலாக ஈரான் மற்றும் வட கொரியா கருப்பு பட்டியலில் உள்ள நாடுகள் ஆகும்.

**3)** நாகாலாந்தின் முதல் லோக் ஆயுக்தாவாக பிரமாணம் எடுத்துக் கொண்டவர் யார்?

**A]** K.M. முன்ஷீ

**B]** உமாநாத் சிங்

**C]** ரகுவீர் சிங்

**D]** ரவி மல்கோத்ரா

✓ மேகாலயா உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியாக இருந்த நீதியரசர் உமாநாத் சிங், அவர்கள் நாகாலாந்தின் முதல் லோக் ஆயுக்தா வாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

✓ இவரது பதவிக்காலம் ஐந்து வருடங்கள் அல்லது **70** வயது வரம்பு வரை.

✓ கோஹிமாவில் உள்ள ராஜ் பவனில் ஆளுநர் பிபி ஆச்சாரியாவால் பிப்ரவரி **22**ம் தேதி பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

- ✓ ஒருமுறை நியமிக்கப்பட்ட பின் லோக் ஆயுக்தாவை கலைக்கவோ மாற்றியமைக்கவோ அரசாங்கத்திற்கு உரிமை இல்லை. மாறாக கண்டனத் தீர்மானத்தின் மூலம் லோக் ஆயுக்தாவை மாநில சட்டமன்றத்தால் நீக்க முடியும்.
- ✓ லோக் ஆயுக்தா மற்றும் உப லோக் ஆயுக்தா சட்டம் **1971** இன் கீழ் லோக் ஆயுக்தாவை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- ✓ பிறகு இந்த சட்டத்தின்கீழ் ஒடிசா, ராஜஸ்தான், பீகார், உத்தரப் பிரதேசம், கர்நாடகா, மத்திய பிரதேசம், ஆந்திரபிரதேசம், குஜராத், கேரளா, தமிழ்நாடு மற்றும் யூனியன் பிரதேசமான டெல்லியும் லோக் ஆயுக்தாவை அறிமுகப்படுத்தியது.

**4) Translational Health Science and Technology Institute ( THSTI )** உடன் இந்தியாவின் எந்த ஐஐடி நிறுவனம்பொது சுகாதார பிரச்சனைகளை களைவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது?

**A]** ஐஐடி பாம்பே

**B]** ஐஐடி இந்தூர்

**C]** ஐஐடி கான்பூர்

**D]** ஐஐடி மெட்ராஸ்

- ✓ **THSTI** உடன் இந்தியாவில் உள்ள ஐஐடி மெட்ராஸ் எனும் நிறுவனம் பொது சுகாதார பிரச்சினைகளை களைவதற்கும் ஆபத்தான மகப்பேறு பிரச்சனைகளை முன்கூட்டியே அறிய உதவும் தொழில்நுட்பத்தை கண்டறியவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.
- ✓ இதன் நோக்கம் மருத்துவர்கள், விஞ்ஞானிகள், உயிரியலாளர்கள், பொறியியலாளர்கள், தகவல் விஞ்ஞானிகளை ஒருங்கிணைத்து பேறுகால மற்றும் குழந்தைகள் நலத்தை மேம்படுத்த தொழில்நுட்பத்தை வகுக்கும் வகையில் அமைக்கப்பட்டது.
- ✓ உயிரி தொழில் நுட்ப துறையின்**(Bio technology)** கீழ் அமைந்த தன்னாட்சி நிறுவனம் **THSTI** ஆகும்.
- ✓ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் கீழ் உயிரி தொழில்நுட்பத் துறை இயங்குகிறது.

**5)** சமீபத்தில் காலமான கோடி ராமகிருஷ்ணா எந்த பிராந்திய சினிமாவின் புகழ்பெற்ற திரைப்பட இயக்குனர் ஆவார்?

A] தெலுங்கு

B] தமிழ்

C] மலையாளம்

D] ஒரியா

- ✓ **69** வயதான கோடி ராமகிருஷ்ணன் என்பவர் தெலுங்கு சினிமா துறையில் புகழ்பெற்ற இயக்குனர் ஆவார். கடந்த பிப்ரவரி மாதம் **22**ஆம் தேதி ஹைதராபாத்தில் காலமானார்.
- ✓ இவர் ஆந்திர பிரதேசத்திலுள்ள மேற்கு கோதாவரி மாவட்டத்தின் பலகொல்லூ என்ற ஊரில் பிறந்தார்.
- ✓ இன்ட்லோ ராமையா வீதிலோ கிருஷ்ணய்யா என்ற நகைச்சுவை திரைப்படத்தின் மூலம் **1992** ஆம் ஆண்டு அறிமுகமானார்.
- ✓ இந்தப் படத்தில் சிரஞ்சீவி நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. **VFX** எனப்படும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் வல்லவர்.
- ✓ அம்மொரு மற்றும் அருந்ததி போன்ற படங்கள் இவரது **VFX** திறமைக்கு பாராட்டப்பட்டது.
- ✓ மேலும் இவரது குறிப்பிடத்தக்க சில படங்கள் குட்டாச்சாரி நம்பர் ஒன், முட்டுல கிருஷ்ணய்யா, பெல்லி பெல்லி பந்தினி, ரிக்ஷாஒடு ஆகும்.
- ✓ **2016** ஆம் ஆண்டு சத்ய சாய்பாபா வின் வாழ்க்கை வரலாற்றை படமாக்க முடிவு செய்து மலையாள நடிகர் ஸ்ரீ ஜித் விஜய் இதில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தார். ஆனால் இந்த படம் இன்னும் முடிவடையவில்லை.

**6)** கீழ்காணும் எந்த செய்தி நிறுவனம் **Xin Xiaomeng** என்ற உலகின் முதல் பெண் **AI (Artificial intelligence)** செய்தி வாசிப்பாளரை அறிமுகப்படுத்தியது?

A] Central news agency

B] Kyodo

C] Xinhua

D] Yonhap



winmeen.com

- சீனாவை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் **Xinhua** என்ற செய்தி நிறுவனம் உலகின் முதல் பெண் **AI (Artificial intelligence)** செய்தி வாசிப்பாளரை அறிமுகப்படுத்தியது.
- **Xin Xiaomeng** தன் சக ஆண் **AI** செய்திவாசிப்பாளர் உடன் செய்திகளை வழங்கும்.
- **Xinhua and Search engine company Sogou** உடன் இணைந்து இதை உருவாக்கினர்.
- அந்நாட்டின் தேசிய சட்ட சபை மற்றும் உயரிய அரசியல் சார்ந்த கூட்டத்திற்குப் பின் வருகின்ற மார்ச்சு மாதம் தன் சேவையைத் தொடங்குகிறது.
- கடந்த **2018** ஆம் ஆண்டு **Qui Hao** என்ற ஆண் செய்தி வாசிப்பாளரை **(AI)** வடிவமைத்து வெளியிட்டது.

**7) 2019** ஆம் ஆண்டுக்கான **Future for Nature** என்ற விருதைப் பெற்ற முதல் இந்திய பெண்மணி யார்?

**A]** நீதா தேசாய்

**B]** திவ்யா கர்னாட்

**C]** ரோஷினி முகர்ஜி

**D]** மன்பிரீத் சிங்

- கடல் சார் வளங்களை பாதுகாக்க முயற்சி எடுத்ததால் அசோகா பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் டாக்டர் திவ்யா கர்னாட் என்பவருக்கு **2019** ஆம் ஆண்டுக்கான உயரிய விருதான **Future for Nature** என்ற விருது வழங்கப்பட்டது.
- இந்த விருதைப் பெறும் முதல் பெண் மற்றும் இரண்டாவது இந்தியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- டாக்டர் சாரு தத்தா மிஸ்ரா இந்த விருதைப் பெற்ற முதல் இந்தியர் ஆவார். வன விலங்குகள் மற்றும் பிரபஞ்சத்தில் உள்ள பிற உயிர்களை பாதுகாக்க எடுக்கப்பட்ட வழிமுறைகளையும் சாதனைகளையும் ஆராய்ந்து வழங்கும் இது ஒரு சர்வதேச விருது ஆகும்.

**8) Velayat 97** என்ற கடற்படை பயிற்சியை பெர்ஷிய வளைகுடாவில் இருந்து இந்தியப் பெருங்கடல் வரை நடத்திய நாடு எது?

**A]** துருக்கி

**B]** ஈரான்

**C]** சவுதி அரேபியா



winmeen.com

D] ஓமன்

- ✓ ஈரானிய கடற்படை **Velayat 97** என்ற மூன்று நாள் பயிற்சியை **2** மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவுடைய ஹார்மஸ் மற்றும் இந்திய பெருங்கடலில் நடத்தியது.
- ✓ இந்தப் பயிற்சியின் மூலம் ஈரானின் நீர்மூழ்கிகள், போர்க்கப்பல்கள், ஹெலிகாப்டர்கள், மற்றும் **drones** எனப்படும் கருவிகளை உலகுக்கு காட்டியது.
- ✓ மார்க்கன் தென்கிழக்கு கடற்கரையில் உள்ள ஹார்மஸ் என்னுமிடத்திலிருந்து ஓமன் கடல் மற்றும் இந்தியப் பெருங்கடலின் வடக்கு பகுதி வரை இந்த பயிற்சி நடந்தது.
- ✓ வார்சா **( WARSAW )** என்ற உச்சிமாநாட்டில் வாஷிங்டன் ஈரானின் மீது கண்டனத்தை பதிவு செய்ததை தொடர்ந்து இந்த கடற்பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.
- ✓ ஈரானில் ஏற்பட்ட தீவிரவாதத் தாக்குதலுக்கு பிறகு ஈரானுக்கும் சவுதி அரேபியாவிற்க்கும் இடையே பதற்றம் நிலவி வருகிறது. இதில் ரியாத் மீது டெக்ரான் கடும் கண்டனத்தை பதிவு செய்துள்ளது. மேலும் ஐக்கிய அரபு அமீரகம், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா மீது ஈரான் தன் கண்டனத்தை சமீபத்தில் பதிவு செய்துள்ளது. ஹார்மஸ் என்ற இடம் அமெரிக்காவின் பதற்றமான பாதையாகும்.
- ✓ இந்த இடத்தில் பயிற்சி நடத்துவதன் மூலம் அமெரிக்காவை எச்சரிக்கும் விதமாக ஈரான் செயல்பட்டுள்ளது.

**9) Swasth Immunised India** என்ற பிரச்சாரத்தின் விளம்பரத் தூதுவராக நியமிக்கப்பட்டவர் யார்?

A] ஆலியா பட்

B] ஐஸ்வர்யா ராய்

C] கரீனா கபூர்

D] தீபிகா படுகோன்

- ✓ ஸ்வத் நோய் தடுக்கப்பட்ட இந்தியா **(Swasth Immunised India)** என்ற பிரச்சாரத்தின் விளம்பர தூதுவராக கரீனா கபூர் நியமிக்கப்பட்டுள்ளார். குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதால் ஏற்படும் நன்மைகளை பெற்றோர்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட விழிப்புணர்வு பிரச்சாரமே ஆகும். இதன்மூலம் நோயில்லா வருங்கால சந்ததியினரை உருவாக்க இயலும்.
- ✓ **Serum Institute of India and Network 18** இணைந்து நாடு தழுவிய தடுப்பூசி மற்றும் நோய்த்தடுப்பு பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளது.

✓ தடுப்பூசி போடும் முறை தடுப்பூசியை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இதன் மூலம் நோயில்லா சமூகத்தை உருவாக்குவதே இந்தப் பிரச்சாரத்தின் முதன்மையான நோக்கமாகும். அரசாங்கத்துடன் இணைந்து தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் கல்வி அறிவின் மூலம் இந்தத் திட்டம் மேலும் கொண்டு செல்லப்படும்.

**10) வரி வழக்குகளைப் பற்றி ஆராய அமைக்கப்பட்ட Central board of direct taxes (CBDT) குழுவின் தலைவர் யார்?**

**A]** சஞ்சீவ் சர்மா

**B]** மோகித் குமார்

**C]** வருண் ஜெயின்

**D]** கே எஸ் தாஸ்

✓ **Central board of direct taxes (CBDT)** வரி வழக்குகளை பற்றி ஆராய **4** பேர் கொண்ட குழுவை அமைத்தது.

✓ இதன் இறுதி அறிக்கை மற்றும் பரிந்துரைகளை மார்ச் மாதம் **2019**ஆம் ஆண்டுக்குள் சமர்ப்பிக்க அறிவுறுத்துகிறது.

✓ அறிவிப்புகள் வழங்குவதற்கு முன்னதாக வரி அதிகாரிகளுக்கு என்று தனியே விலக்கு அளித்தும் விசாரணையை முடிப்பதற்கு குறிப்பிட்ட கால அவகாசத்தையும் தர பரிந்துரைகள் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ இந்த குழுவின் தலைவர் வருமான வரி துறை ஆணையர் சஞ்சய் சர்மா ஆவார்.